Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 253/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | முத்துகுமார் |
| Father's Name | -- | கருப்புசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 25th March 2022.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோடாங்கிபட்டியில் குடியிருந்துவருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்துவருகிறேன். அசா.1 பாஞ்சாலி மற்றும் அசா.2 கருப்புசாமி எனது பெற்றோர் ஆவார். 22.09.2017 அன்று எங்கள் வீட்டின் கிழபுறமாக சிமெண்ட் சீட் வைத்து குளியல் அறை கட்டினோம். எங்கள் வீட்டின் கிழபுறமாக குடியிருக்கும் திருமாத்தாள் என்பவர் அந்த சிமெண்ட் சீட்டை பிரித்துக்கொண்டுபோய்விட்டார். இரவு 10.30 மணியளவில் மேற்படி திருமாத்தாள் என்பவரின் மகன் செல்வகுமார் எங்கள் வீட்டு கதவினை இரும்பு ராடால் உடைத்து உள்ளே வந்து அம்மாவை பார்த்து தகாத வார்த்தையால் பேசினார். சாட்சி மேற்படி வார்த்தையை நீதிமன்றத்தில் கூறத்தயங்கியதால் வெற்றுதாளில் இருதரப்பு வழக்குரைஞர்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் எழுத அனுமதிக்கப்பட்டது. அது அசாஆ.2 ஆக குறியீடுசெய்யப்பட்டது. அவர் இரும்பு ராடால் எனது அப்பா கருப்புசாமியின் கையில் அடித்ததால் முழங்கைக்கு மேல் இரத்தக்காயம் ஆனது. அதன் பின்பு அவர் சென்றுவிட்டார். நானும் அப்பாவும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இதுசம்பந்தமாக 27.09.2017 அன்று எனது அம்மா அசா.1 பாஞ்சாலி ஆழியார் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். ஆஜர் எதிரிதான் மேற்படி செல்வகுமார் ஆவார்.இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

அரசுதரப்பு சாட்சி பகுதி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் இரும்பு ராடால் அடித்த பின்பு ஏதேனும் மிரட்டினாரா என்றால் ஆமாம். என்ன சொல்லி மிரட்டினார் என்றால் இரும்பு ராடை காட்டி என்னைக்கு இருந்தாலும் கொன்றுபோடுவேன் என்று மிரட்டினார். இதற்கு முன்பு பதற்றத்தில் சொல்ல மறந்துவிட்டேன்.

குற்றம்சாட்டப்பட்டவர் மற்றும் குற்றம்சாட்டப்பட்டவரின் கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜர்.குறுக்குவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 253/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | சபரிராஜ் |
| Father's Name | -- | மாணிக்கம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 25th March 2022.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோடாங்கிபட்டியில் குடியிருந்துவருகிறேன். நான் ஆயுாவேதிக்கம்பெனியில் வேலை செய்துவருகிறேன். 22.09.2017 அன்று எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் திருமாத்தாள் மற்றும் அசா.2 கருப்புசாமி ஆகிய இருதரப்பினருக்கும் திருமாத்தாளின் இடத்தில் அசா.2 கருப்புசாமி தரப்பினர் பாத்ரூம் கட்டியதாக ஏதோ பிரச்சனை ஏற்பட்டது. பின்னிட்டு செல்வகுமார் வந்து அசா.2 கருப்புசாமியை இரும்பு ராடால் அடித்துள்ளார். மேற்படி விபரத்தை நான் கண்ணுறவில்லை. சத்தம் கேட்டு அசா.2 கருப்புசாமி வீட்டிற்கு சென்றுபார்த்தபோது, அசா.2 கருப்புசாமி கையில் அடிபட்டு அருகில் குற்றம் சாட்டப்பட்டவர் நின்றுகொண்டிருந்தார். இருதரப்பினரையும் விலக்கிவிட்டேன். அசா.2 கருப்புசாமி செல்வகுமார் தன்னை இரும்பு ராடால் கையில் அடித்துவிட்டதாக கூறினார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பு சாட்சி அனுசரியாத சாட்சியாக கருதுவதால் அரசுதரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.
ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். நான் ஆஜர் எதிரி அசா.1 பாஞ்சாலியை கீழே தள்ளிவிட்டு அசா.2 கருப்புசாமியை இரும்பு ராடால் அடித்து காயப்படுத்தி அசா.1 பாஞ்சாலியை பார்த்து தகாத வார்த்தையால் பேசி அசா. 2 கருப்புசாமிக்கு குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்ததை நான் கண்ணுற்றும் அவ்வாறு போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சத்தம் கேட்டு பின்னிட்டு வந்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குற்றம்சாட்டப்பட்டவர் மற்றும் குற்றம்சாட்டப்பட்டவரின் கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜர்.குறுக்குவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi